## தேசிய செய்திகள்

### மணிப்பூர்

### உலகின் உயரமான கிர்டர் ரயில் பாலத்திற்கு SAIL எஃகு வழங்கியது

- மணிப்பூரில், 111 கிமீ நீளமுள்ள ஜிராபம்-துப்புல்-இம்பால் புதிய பரந்த பாதை ரயில் திட்டத்திற்காக, ஸ்டீல் அதாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட் (SAIL) 60,000 டன் எஃகு பொருள்களை வழங்கியுள்ளது.

### தமிழ்நாடு

### ஐபிஎம் உடன் இணைந்து என்பிடிஇஎல் ஆன்லைன் பயிற்சி

- பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனமான ஐபிஎம் உடன் இணைந்து தொழில்நுட்ப முன்னேற்ற கற்றல் தேசிய திட்டம் (NPTEL) மூலம் தொகுதி வாரிய கட்டிடக்கலை, வடிவமைப்பு மற்றும் பயன்பாடு ஆகியவற்றிற்கு 12-வார ஆன்லைன் பயிற்சி வழங்கப்படும்.

## சர்வதேச செய்திகள்

### உயிர் எரிபொருள் மூலம் ஓடிய விமானம்

- புதிய கேட் பசிபிக் ஏர்பஸ் ஏ 350-1000 விமானம் பிரஞ்சு நகரமான துலூஸ்ஸில் இருந்து ஹாங்காங் வரை கரும்பு அடிப்படையிலான உயிரி எரிபொருள் மூலம் ஓடியது.

## அறிவியல் செய்திகள்

### அரசு கூகுளுடன் இணைந்து வெள்ளப்பெருக்கை கணிக்கத்திட்டம்

- மத்திய நீர் ஆணையம் கூகுளுடன் இணைந்து வெள்ளப் பெருக்கை கணிக்கவும் நீர் ஆதாரங்களை சிறப்பாக நிர்வகிப்பதற்கும், வெள்ளம் தொடர்பான தகவல்களை மக்களுக்கு பரப்ப ஒப்பந்தம் செய்துள்ளது.

### உலகின் மிகப் பழமையான சுமத்திரா ஒராங்குட்டான் மரணம்

- உலகில் வயதான அருகிவரும் இனங்களில் ஒன்றான சுமத்திரா ஓராங்குட்டான் ஆஸ்திரேலிய மிருகக்காட்சி சாலையில் தனது 62 வயதில் உயிரிழந்துள்ளது.
- "மிக வயதான பெண் " என்று அழைக்கப்படும் 'புவாம்' என்ற பெயர்கொண்ட இந்த ஓராங்குட்டான் வயது முதிர்ச்சி தொடர்பான சிக்கல்கள் காரணமாக கடந்த திங்களன்று உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**வணிகம் & பொருளாதாரம்**

**பத்திரிகையாளர்களுக்கான பயிற்சி திட்டத்தை கூகுள் அறிவித்தது**

- மிகப்பெரிய தொழில்நுட்ப நிறுவனமான கூகுள் தவறான தகவல் மற்றும் போலி செய்திகளுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பத்திரிகையாளர்களுக்கான பயிற்சித் திட்டத்தை அறிவித்தது.

**கடலோரப் பகுதிகளுக்கான காற்று சக்தி தேசிய இலக்குகளை அரசு அறிவித்துள்ளது**

- காற்றுத் தொழில்துறைக்கு நம்பிக்கை ஏற்படுத்த காற்று ஆற்றல் திறன் மேம்பாட்டிற்காக, அமைச்சகம் 2022 ஆம் ஆண்டில் 5 ஜிகாவாட், 2030 ஆம் ஆண்டில் 30 ஜிகாவாட் ஆகிய நடுத்தர மற்றும் நீண்டகால இலக்கை அறிவித்துள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்(MoU),ஒப்பந்தங்கள் & மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

**மாநாடுகள்**

**நீடித்த வளர்ச்சிக்கு நீரின் அவசியம்: பத்தாண்டிற்கான சர்வதேச நடவடிக்கை 2018-2028**

- துஷான்பேயில் நடைபெற உள்ள "நீடித்த வளர்ச்சிக்கு நீரின் அவசியம்: பத்தாண்டிற்கான சர்வதேச நடவடிக்கை 2018-2028" என்ற உயர் மட்ட மாநாட்டில் நிதின் கட்கரி பங்கேற்கிறார். உலகம் முழுவது ஒருங்கிணைந்த மற்றும் நீடித்த நீர்வள மேலாண்மை குறித்த தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச நடவடிக்கைகளை ஊக்குவிப்பதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

## பாதுகாப்பு செய்திகள்

### இணைய பாதுகாப்புக் கட்டமைப்புக்கான பயிலரங்கு 2018

- பாதுகாப்புத் துறைக்காக, பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு உற்பத்தித்துறை இணைய பாதுகாப்பு கட்டமைப்பு பயிலரங்குக்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்த பயிலரங்கை பாதுகாப்பு அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தொடங்கி வைத்தார்.

## திட்டங்கள்

### தேசிய சுகாதார சுயவிவரம் - 2018

- மத்திய சுகாதார புலனாய்வுத் துறையால் (CBHI) தயாரிக்கப்பட்ட தேசிய சுகாதார சுயவிவரம் - 2018 சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஸ்ரீ ஜீ பி நட்டாவால் வெளியிடப்பட்டது.

### தரநிலைக்கான தேசிய வியூகம்

- இந்திய தொழில்துறை வர்த்தக மற்றும் கூட்டமைப்பு (சிஐஐ) திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தரநிலைக்கான தேசிய வியூகத்தை வர்த்தக மந்திரி 5 வது தேசிய நியதிக் கூட்டத்தில் புது தில்லியில் வெளியிட்டார்.

### இந்தியாவின் தேசிய டிஜிட்டல் நூலகம்

- ஐ.ஐ.டி கரக்பூரால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் தேசிய டிஜிட்டல் நூலகம் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகரால் புது தில்லியில் தொடங்கப்பட்டது.

### ஒருங்கிணைந்த முதலமைச்சர்கள் துணைக்குழு

- வேளாண்மை மற்றும் மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கொள்கை அணுகுமுறைகளை ஒருங்கிணைக்க முதலமைச்சர்கள் துணைக்குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.
- திட்டத்திற்கான ஒருங்கிணைந்த கொள்கை அணுகுமுறைகளை ஏற்படுத்த, ஏழு மாநில முதலமைச்சர்களையும் ஒருங்கிணைக்கும் அமைப்பாளராக மத்தியப் பிரதேச முதலமைச்சரை பிரதமர் நியமித்துள்ளார்.

**தரவரிசை & குறியீடு**

**இருதய நோய்க்கான ஆபத்து**

- கேரளம் முதலிடத்திலும் ஜார்கண்ட் கடைசி இடத்திலும் உள்ளது.
- பெண்களுக்கான உயர்ந்த சராசரி இதய ஆபத்து - கோவா (16.73%)
- ஆண்களுக்கான உயர்ந்த சராசரி இதய ஆபத்து - ஹிமாச்சல பிரதேசம், நாகாலாந்து (24.23%)

**புத்தகங்கள் & ஆசிரியர்கள்**

- **கழிமுகம் (ஆறு கடலோடு கலக்கும் இடம்) - பெருமாள் முருகன்**

**காவல்துறைக்கான சட்ட நடைமுறைக் கையேடு**

- குழந்தைகளுக்கு எதிரான குற்றம் தொடர்பாகக் காவல்துறைக்கான சட்ட நடைமுறைக் கையேட்டை மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி மேனகா சஞ்சய் காந்தி தில்லியில் இன்று நடைபெற்ற விழா ஒன்றில் வெளியிட்டார்.

**விருதுகள்**

- **மனிஷா வருண் - திருமதி. இந்தியா யுனிவர்ஸ் 2018**

**நியமனங்கள்**

- **சந்தீப் பக்ஷி - ஐசிஐசிஐ வங்கியின் தலைமை இயக்க அதிகாரி**

**விளையாட்டு செய்திகள்**

**481 ரன்கள் குவித்து இங்கிலாந்து உலகசாதனை**

- ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டில் 481 ரன்கள் குவித்து இங்கிலாந்து புதிய உலகசாதனையை நிகழ்த்தியதோடு, ஆஸ்திரேலியாவை 239 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றியை ஈட்டியதோடு ஒருநாள் தொடரையும் 3-0 என்று கைப்பற்றியது.